# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-95** **தேதி:-10.10.2011.**

## வேலை நிறுத்தம் ஒத்தி வைப்பு... ஒன்று பட்ட போராட்டத்திற்காக...

அன்பார்ந்த தோழர்களே!

அகில இந்திய கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் 04.10.11ஆம் தேதி புது டெல்லியில் உள்ள தேசிய கவுன்சில் அலுவலகத்தில் BSNL MS பொது செயலாளர் தோழர் சுரேஷ் குமார் தலைமையில்நடைபெற்றது. அதில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

**(1)10.10.2011 வேலை நிறுத்தம்:-**

வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு பணிகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களையும் மற்றும், இந்த வேலை நிறுத்தத்தில் NFTE, FNTO ஆகிய சங்கங்களை இணைப்பது தொடர்பான நமது முயற்சிகள் தொடர்பாகவும் விரிவாக விவாதிக்கப்பட்டது. விருப்ப ஓய்வு திட்டம், போனஸ் உள்ளிட்ட நமது பல கோரிக்கைகளுக்கு நிர்வாகத்திடமிருந்து எந்த ஒரு உறுதியான வாக்குறுதியும் கிடைக்கவில்லை என அந்த கூட்டம் முடிவு செய்தது. எனினும் பரந்து பட்ட ஒற்றுமையை கட்டவும், NFTE, FNTO உள்ளிட்ட சங்கங்களை இந்த போராட்டத்தில் இணையச் செய்வதற்கும் ஏதுவாக அக்டோபர் 10ஆம் தேதி நடைபெற இருந்த வேலை நிறுத்தத்தை நவம்பர் முதல் அல்லது இரண்டாவது வாரத்திற்கு ஒத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் NFTE மற்றும் FNTO சங்கங்களை ஒன்று பட்ட போராட்டத்திற்கு கொண்டுவருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். வேலை நிறுத்தத்தை ஒத்திவைப்பதற்கான கடிதத்தை நிர்வாகத்திற்கு கொடுக்கப்படும்.

**(2) BSNLன் கோபுரங்களையும், கண்ணாடி இழை கம்பிகளையும் (Optic Fibre Cable) பராமரிக்கும் பணிகளை Outsourcing/ குத்தகைக்கு விடுவது:-**

BSNLன் 70,000க்கும் மேற்பட்ட கோபுரங்களையும், 6.25 லட்சம் கிலோமீட்டர் தூரம் உள்ள கண்ணாடி இழை கம்பிகளையும் பராமரிக்கும் பணி Outsourcing/ குத்தகைக்கு விடுவது என முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த முடிவினை கூட்டு நடவடிக்கைக் குழு வன்மையாக கண்டிக்கிறது. தொழிற்சங்கங்களை கலந்து ஆலோசிக்காமல், நிர்வாகம் இது போன்ற முடிவுகளை தன்னிச்சையாக முடிவு செய்து வருவதை சுட்டிக் காட்டப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**(3) DOTக்கு ஓய்வூதிய பங்கினை வழங்குவது:-**

BSNL நிறுவனம் DOTக்கு வழங்கிவரும் ஓய்வூதிய பங்கு, ஊழியர் வாங்கும் ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவில் என இருப்பதை அவர் வாங்கும் உண்மையான ஊதியத்தின் அடிப்படையில் தான் தரப்பட வேண்டும் எனும் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கோரிக்கையினை நிர்வாகம் ஏற்றுக்கொண்டு DOT மற்றும் DOP&T ஆகியவற்றிற்கு அனுப்பி உள்ளது. இந்த பிரச்சனை தொடர்பாக அரசாங்கத்துடன் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்ந்து விவாதித்து முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

**(4) கூட்டு நடவடிக்கைக் குழுவின் அடுத்த கூட்டம் தேசிய கவுன்சில் அலுவலகத்தில் 17.10.2011 அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.**

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

/S. செல்லப்பா/
**மாநில செயலாளர்**